விலை: 50.00
பக்கங்கள் : 12

website : www.valampurii.lk
viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka




# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 183 வள்ளுவர் ஆண்டு 2054 ஆனி 05 செவ்வாய்க்கிழமை (20.06.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

# ஐ.நாவில் இலங்கைக்கு கடும் நெருக்கடி

## ஆரம்ப உரையில் ஐ.நா ஆணையாளர்



(ஜெனிவா)

- இலங்கை பொறுப்புக்கூறலை நிராகரித்தாலும் ஐ.நா தொடர்ந்து பணியாற்றும் என ஐ.நா ஆணையாளர் தெரிவிப்பு.
- இலங்கை தொடர்பாக ஐ.நாவின் கடந்த கால பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துமாறு வலியுறுத்து.

ஐ.நா மனித உரிமை பேரவையின் 53ஆவது அமர்வில் நேற்று உரையாற்றிய மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டர்க் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

▷11

## நயினைத் தாயின் திருவிழா கொடியேற்றத்துடன் ஆரம்பம்



▷11

## லண்டனில் ரணிலுக்கு எதிராக ஈழத் தமிழர்கள் போராட்டம்




▷11

### பிக்குமார் நாட்டின் சாபக்கேடு

## தமிழர்களின் காணிகளை பறிப்பதற்கு பல திணைக்களங்கள் முயற்சி

### சிறீதரன் எம்.பி குற்றச்சாட்டு



(யாழ்ப்பாணம்)

பௌத்த பிக்குமார் நாட்டின் சாபக்கேடு தமிழர்களின் காணிகளை பறிப்பதற்கு இலங்கையின் பல திணைக்களங்கள் முயற்சி செய்வதாக சிறீதரன் எம்.பி குற்றம் சாட்டியுள்ளார்.

ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்

▷11

## சீமெந்துக்கான வரி அதிகரிப்பு

(கொழும்பு)

50 கிலோ மற்றும் அதற்கும் குறைவான பொதிகளில் இறக்குமதி செய்யப்படும் சீமெந்துக்கு விதிக்கப்பட்டிருந்த வரி 5 ரூபாயிலிருந்து 8 ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், மொத்தமாக அல்லது 50 கிலோவுக்கு மேல் இறக்குமதி செய்யப்படும் சீமெந்துக்கான

▷11

## நண்பர்கள் முன்னிலையில் கணவனை திட்டிய மனைவி

### மனமுடைந்த கணவன் உயிர்மாய்ப்பு

(முல்லைத்தீவு)

நண்பர்கள் முன்னிலையில் கணவனை மனைவி திட்டியதால் மனமுடைந்து விபரீத முடிவெடுத்த கணவன் உயிரிழந்துள்ளார்.

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது,

இதில் 24 வயதுடைய இளம் குடும்பஸ்தரே உயிரிழந்துள்ளார் என புதுக்குடியிருப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

நண்பர்களுடன் சேர்ந்து மது அருந்

▷11

## மல்லாவியில் ஒருவர் அடித்துப் படுகொலை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மல்லாவிப் பகுதியில் ஒருவர் அடித்துப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

பிரேத பரிசோதனையில் இது உறுதி செய்யப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு, மல்லாவி - பாலிநகர் - மூன்றுவாய்க்கால் வயல் பகுதியிலிருந்து இரு நாட்களுக்கு முன் ஆணின் சடலம் ஒன்று மீட்கப்பட்டிருந்தது.

சடலமாக மீட்கப்பட்டவர் வட்டக்கச்சியைச் சேர்ந்த இளையதம்பி ராஜ் மோகன் (வயது-49)

▷11




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 28 - 12 - 1945

மறைவு 11 - 07 - 2021

## அமரர் பூவையா பங்கயம்

திதி : பூர்வ பக்க துதியை

அன்பிற்கு இலக்கணமே - எம்
அன்னையே தெய்வமே
கண்ணில் எமை வைத்துக் காத்தீர்கள்
கலக்கம் ஏதுமின்றி எமை வளர்த்தீர்கள்
எம் காலம் உள்ளவரை
உம்மையும் உம் அன்பையும் மறவோம் அம்மா!

236/3, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

என்றும் உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்

(16016)

# மரண அறிவித்தல்



தோற்றம் 05 - 02 - 1942

மறைவு 19 - 06 - 2023

## பத்மநாதன் ஈஸ்வரி

சந்தைவளவு சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட பத்மநாதன் ஈஸ்வரி அவர்கள் 19.06.2023 திங்கட்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - நாகமுத்து தம்பதிகளின் மூத்த மகளும் காலஞ்சென்றவர்களான சீனிவாசகம் மீனாட்சி தம்பதிகளின் மருமகளும் பத்மநாதனின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கந்தசாமி, ஈஸ்வரானந்தன் மற்றும் தவமணிதேவி, கமலாம்பிகை ஆகியோரின் அன்புச் சகோதரியும் இரத்தினம்மா, ஞானேஸ்வரி, அப்புத்துரை, நாகேந்திரமூர்த்தி, காலஞ்சென்ற மகேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 20.06.2023 செவ்வாய்க்கிழமை பகல் 1.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:- குடும்பத்தினர்
077 668 3711

(16028)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378, 076 097 3127

# பெயர் மாற்ற அறிவித்தல்

கும்பலை அளவெட்டி கிழக்கில் வசிக்கும் **பொன்னுத்துரை பியதாஸ்** எனும் பெயரை இன்று முதல் **வியதாஸ்** என பெயர் மாற்றம் செய்கிறேன். எனவே இனிவரும் காலங்களில் என் சார்ந்த சகல ஆவணங்களிலும் இப் பெயரையே பயன்படுத்துவேன் என இலங்கை வாழ் சனநாயக குடியரசின் கீழ் வாழும் மக்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.

**உண்மையுள்ள**
**பொன்னுத்துரை வியதாஸ்**

(16019)

# கண்ணீர் அஞ்சலி

எமது சக நண்பன் **திரு.இராசரத்தினம் கபில்றாச்**
அவர்களின் அன்புத் தந்தை
**அமரர்**
**தம்பிப்பிள்ளை இராசரத்தினம்**
அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை
தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா
சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.



ஆழ்ந்த அனுதாபத்துடன்
**யாழ்ப்பாண மருத்துவ பிரதிநிதிகள் சங்கம்**

(16021)

# Invitation for Bids (IFB)

**Democratic Socialist Republic of Sri Lanka**
**Valikamam East Pradeshiya Sabha, Puttur**

The **Chairman Local Authority Procurement Committee** on behalf of the **Valikamam East pradeshiya Sabha, Puttur,** invites sealed bids from eligible and qualified bidders for the procurement of Machinery's as in table below.

1. Bidding will be conducted through National Competitive Bidding Procedure.
2. Interested eligible bidders may obtain further information on public working days between **09:00** hrs and **15:00** hrs from 20th June 2023 to 04th July 2023 from **Secretary, Valikamam East Pradeshiya Sabha, Puttur** and inspect the bidding documents at the same place on the above time.

   TP:- 021 205 8867, 021 205 8883    Email secveps@yahoo.com
3. Qualification requirements are include possessing the minimum 1 years' experience in selling and having maintenance in the particular brand and field. Additional details are provided in the bidding document.
4. A complete set of Bidding Document is English language may be purchased by interested bidders on submission of a written application to the address. **Secretary, Valikamam East Pradeshiya Sabha, Puttur** from **20th June 2023 until 04th July 2023 from 09.00 hrs to 15.00 hrs** on public working days from 09:00 hrs to 15:00 hrs and upon payment of non-refundable fee of Rs 2,000.00 (Including all Taxes). The method of payment should be by cash.
5. Complete bid should be forward in sealed envelopes. The Envelopes should be marked the **"Bid number"** on top left-hand corner of the envelop. Complete Bids should be delivered to **Chairman, Local Authority Procurement Committee, Valikamam East Pradeshiya Sabha, Puttur** on or before **05th July 2023 at 14.00 hrs.** Electronic bidding will not be permitted. Late bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the bidders or their representatives who choose to attend in person.
6. The Bid shall be valid up to 23rd August 2023.

| Ser. No | Name of Item | Bid No | Period of Contract | Bid validity period from date of opening | Bid Security | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | Amount | Required period |
| 1 | Supplying and Installation of **Wood Chipper Machine / Multi Chopper Machine.** | NP/14/41(13)/3/1/15/ Wood Chipper Machine / 2023 | 02 Month | 49 Days | 15,000.00 | 20.09.2023 |
| 2 | Supplying and Installation of **Compost Grader Huller Machine** | NP/14/41(13)/3/1/15/ Huller Machine / 2023 | 02 Month | 49 Days | 15,000.00 | 20.09.2023 |
| 3 | Supplying and Installation of **Baler Machine** | NP/14/41(13)/3/1/15/ Baler Machine / 2023 | 02 Month | 49 Days | 15,000.00 | 20.09.2023 |
| 4 | Supplying and Installation of **Smart TV** | NP/14/41(13)/3/1/15/ Smart TV / 2023 | 01 Month | 49 Days | 10,000.00 | 20.09.2023 |

**Chairman**
Local Authority Procurement Committee
Valikamam East Pradeshiya Sabha, Puttur. (C-6778) 20.06.2023

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஊழல் எதிர்ப்பு சட்ட மூலத்தில் திருத்தங்களை மேற்கொள்ளாவிட்டால் ஆதரவளிக்க முடியாது

### ஐக்கிய மக்கள் சக்தி

(கொழும்பு)

பாராளுமன்றத்தில் இவ்வாரம் சமர்ப்பிக்கப்படவுள்ள ஊழல் எதிர்ப்பு சட்ட மூலம் பல்வேறு குறைபாடுகளைக் கொண்டுள்ளது. எனவே எம்மால் முன்வைக்கப்பட்டுள்ள பரிந்துரைகள் உள்ளடக்கப்படாவிட்டால் குறித்த சட்ட மூலத்தை நிறைவேற்றுவதற்கு ஆதரவளிக்கப் போவதில்லை என பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத்துடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டுள்ள இணக்கப்பாட்டு ஒப்பந்தத்துக்கமைய ஊழல் ஒழிப்பு சட்டமூலம் அரசாங்கத்தினால் உருவாக்கப்பட்டுள்ளது.

குறித்த சட்டமூலம் மீதான இரண்டாம் வாசிப்பு மீதான விவாதம் இவ்வாரம் பாராளுமன்றத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிலையில் இது குறித்து பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் நிலைப்பாட்டை வினவிய போதே அக்கட்சியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் குறிப்பிடுகையில் ,

ஊழல் எதிர்ப்பு சட்ட மூலத்தில் மக்கள் எதிர்பார்த்த பல விடயங்களை அரசாங்கம் நீக்கியுள்ளது. எனவே தற்போது காணப்படும் சட்டமூலத்தை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது. இது தொடர்பில் தொடர்ந்தும் கலந்துரையாட வேண்டியுள்ளது.

எமது நாட்டிலிருந்து கொள்ளையடித்துச்செல்லப்பட்ட பணம், சொத்துக்கள் என்பவற்றை மீளப் பெற்றுக் கொள்வதற்கான ஏற்பாடு இந்த சட்ட மூலத்தில் உள்ளடக்கப்பட வேண்டும்.

அதே போன்று இதனுடன் தொடர்புடையவர்களுக்கு தண்டனை வழங்குவதற்கான நடவடிக்கையும் எடுக்கப்பட வேண்டும்.

எனினும் இது தொடர்பான எந்தவொரு ஏற்பாடுகளும் இந்த சட்ட மூலத்தில் இல்லை. எமது நிலைப்பாட்டை நாம் அறிவித்திருக்கின்றோம்.


இந்த சட்ட மூலம் முழுமையானதல்ல. எனவே தற்போதுள்ள குறைபாடுகளை நீக்கி அதனை சமர்ப்பிக்குமாறு அரசாங்கத்திடம் வலியுறுத்துகின்றோம். அவ்வாறில்லை எனில் இதற்கு ஐக்கிய மக்கள் சக்தி ஆதரவளிக்காது என அவர் தெரிவித்தார். (நி)

# அரசியல் பிழைப்புக்காக மோதல்களை தூண்டும் அரசு

## அநுரகுமார குற்றச்சாட்டு

(கொழும்பு)

**அரசாங்கம் தனது அரசியல் பிழைப்புக்காக நாட்டில் மீண்டும் இன, மத மோதல்களை தூண்ட முயற்சிப்பதாக தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க குற்றம் சுமத்தியுள்ளார்.**



ஓய்வுபெற்ற முப்படைகள் மன்றத்தின் அனுராதபுரம் மாவட்ட மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர்,

75 வருடங்களாக நாட்டை அழித்த ஆட்சியாளர்களுக்கு எதிராக அடிமட்ட சிங்கள, முஸ்லிம் மற்றும் தமிழ் மக்கள் அனைவரும் ஒன்றிணைந்துள்ளனர்.

இந்த நிலையில், அனைத்து சமூகங்களினதும் ஒற்றுமையால், அச்சமடைந்த ஆட்சியாளர்கள் தற்போர்து மீண்டும் அவர்களை பிளவுபடுத்த முயற்சிக்கின்றனர் என அநுரகுமார தெரிவித்துள்ளார்.

இதன்படி, ஆட்சியாளர்கள் மக்களை வடக்கு, தெற்கு என பிரித்துவிட்டு, மீண்டும் சிங்களம், தமிழ், முஸ்லிம் என அவர்களை பிரிக்க முயற்சிக்கின்றனர்.

ஆட்சியாளர்களின் இத்தகைய அதிகாரத்தை கைப்பற்றும் முயற்சிக்கு மக்கள் பலியாகி விடக்கூடாது என்று கூறிய அவர், இனவாத மோதல்களால் நாடு பாரிய துன்பங்களை ஏற்கனவே சந்தித்துள்ளது என்பதை சுட்டிக்காட்டியுள்ளார்.

தேசிய நல்லிணக்கத்தின் அடிப்படையிலேயே உலகில் வளர்ந்த நாடுகள் அபிவிருத்தியை அடைந்துள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார். (நி)

## எக்ஸ்-பிரஸ் பேர்ல் பேரழிவுக்கான இழப்பீடு 6.4 பில்லியன் டொலர்கள்

(கொழும்பு)

எக்ஸ்-பிரஸ் பேர்ல் கப்பல் விபத்தினால் கடல் சுற்று சூழலுக்கு ஏற்பட்ட பேரழிவின் சேதத்திற்கான இழப்பீடு 6.4 பில்லியன் அமெரிக்க டொலர்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜனவரி மாதம் வெளியிடப்பட்ட அறிக்கையைத் தொடர்ந்து இந்த தகவல் வெளியிடப்பட்டதாக சட்டமா அதிபர் திணைக்களம் தெரிவித்துள்ளது.

எக்ஸ்-பிரஸ் பேர்ல் கடல்சார் பேரழிவால் ஏற்பட்ட சேதம் தொடர்பான சட்ட நடவடிக்கைகளுக்காக ஒரு குழு அடுத்த மாதம் சிங்கப்பூர் செல்லும் என்றும் சட்டமா அதிபர் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சிங்கப்பூரில் உள்ள கப்பல் நிறுவனம் மற்றும் பிற பிரதிநிதிகளுடன் குறித்த குழு பேச்சுவார்த்தை நடத்தும் என்றும் சட்டமா அதிபர் திணைக்களம் அறிவித்துள்ளது. (நி)

## பிரித்தானியாவுக்கான உயர்ஸ்தானிகராக ரோஹித போகொல்லாகம



(கொழும்பு)

பிரித்தானியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகராக இலங்கையின் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ரோஹித போகொல்லாகம நியமிக்கப்படவுள்ளார்.

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் சரோஜா சிறி சேனவுக்குப் பதிலாக ரோஹித போகொல்லாகம நியமிக்கப்படுவார் என ஜனாதிபதி அலுவலகம் தெரிவித்துள்ளது.

பிரித்தானியா மற்றும் பிரான்சிற்கான விஜயத்தை முடித்துக்கொண்டு ஜனாதிபதி நாடு திரும்பியதும் அடுத்த வாரம் நியமனம் இறுதி செய்யப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

2007 முதல் 2010 ஆம் ஆண்டுவரை வெளிவிவகார அமைச்சராகவும், 2017 ஜூலை முதல் 2018 டிசெம்பர் வரை கிழக்கு மாகாண ஆளுநராகவும் ரோஹித போகொல்லாகம பதவி வகித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (நி)

## 120 மெகாவோட் மின் உற்பத்தி நிலையம் அமைக்கும் பணி இறுதி கட்டத்தில்

(கொழும்பு)

இலங்கையில் ஈரானிய நிபுணர்களால் 120 மெகாவோட் மின் உற்பத்தி நிலையத்தை நிர்மாணிக்கும் திட்டம் இறுதி கட்டத்தில் இருப்பதாகவும், அது விரைவில் செயல்பாட்டுக்கு வரும் என்றும் ஈரானின் எரிசக்தி அமைச்சர் அலி அக்பர் மெஹ்ராபியன் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் நீர்ப்பாசன அமைச்சர் சஷீந்திர ராஜபக்சவுடன் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற சந்திப்பின் போதே, ஈரானிய அதிகாரி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில், ஈரானுடனான உறவுகளை மேம்படுத்துவது குறித்து திருப்தி தெரிவித்த இலங்கை அமைச்சர், எதிர்காலத்தில் நீர் மற்றும் எரிசக்தி துறைகளில் மேலும் பல திட்டங்களை தொடங்க முடியும் எனவும் தெரிவித்துள்ளார். (நி)

## விமல் வீரவன்சவை கைது செய்ய உத்தரவு

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்சவை கைது செய்வதற்கு நேற்று திங்கட்கிழமை பிடியாணை பிறப்பித்துள்ளது.

நேற்று நீதிமன்றத்தில் முன்னிலையாகத் தவறியதன் காரணமாக அவரைக் கைது செய்து முன்னிலைப்படுத்துமாறு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது. கடந்த 2016 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர் இளவரசர் செயித் அல்ஹூசைன் இலங்கைக்கு விஜயத்தை மேற்கொண்டார்.

இதன்போது, கொழும்பில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் அலுவலகத்திற்கு முன்பாக வீதிகளை மறித்து ஆர்பாட்டத்தில் ஈடுபட்டதன் மூலம் பொதுமக்களிற்கு இடையூறு ஏற்படுத்தியதாக அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

## ஜனவரி முதல் மின்கட்டணத்தில் விசேட சலுகை - காஞ்சன

(கொழும்பு)

மின்சாரக் கட்டணத்துக்கு மேலும் உறுதியான நிவாரணம் வழங்கப்படவுள்ளதாக மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, அடுத்த வருடம் ஜனவரி மாதம் விசேட மின் கட்டணச் சலுகையை மக்களுக்கு வழங்க திட்டமிடப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது, "நாட்டின் சிரமங்களை நான் ஏற்றுக்கொள்கிறேன், மின்சாரக் கட்டணம் அதிகம், எரிபொருளின் விலை அதிகம்.

இப்போது ஜூலையில் திருத்தத்தில் இருந்து சில தொகை குறைக்கப்பட்டுள்ளது.

குறைந்த அளவு மின்சாரம் பயன்படுத்தும் 0 - 30, 30- 60, 60-90 யூனிட்களுக்கு 27% மின் கட்டணத்தை குறைக்க முன்மொழிந்துள்ளோம்.



மின்சாரக் கட்டணத்துக்கு மேலும் உறுதியான நிவாரணம் அளிக்கும் வகையில் இந்தத் திட்டம் ஜனவரி மாதத்தில் செயற்படுத்தப்படும்" என அவர் தெரிவித்தார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகாஜன 14 வயதுப் பெண்கள் உதைபந்தாட்டத்தில் சம்பியன்




இலங்கைப் பாடசாலைகள் உதைபந்தாட்டச் சம்மேளனத்தால் மாவட்ட மட்டத்தில் 14 வயதுப் பெண்கள் அணிகளுக்கிடையில் நடத்தப்பட்ட உதைபந்தாட்டப் போட்டியில் மகாஜனக் கல்லூரி அணி மாவட்டச் சம்பியனாகியுள்ளது. இப்போட்டி நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை யாழ். சம்பத்தரசியார் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இறுதிப் போட்டி மகாஜனக் கல்லூரிக்கும் சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கும் இடையில் நடைபெற்றது. மகாஜனக் கல்லூரி 4:0 என்ற கோல்கள் கணக்கில் வெற்றி பெற்றது. (4-105)


# ஆர்ஜென்டினாவுக்காக அதிவேக கோல் அடித்த மெஸ்சி

உலக சம்பியன் ஆர்ஜென்டினா- அவுஸ்திரேலியா அணிகள் இடையே நட்பு றவு சர்வதேச கால்பந்து போட்டி சீன தலைநகர் பீஜிங்கில் அண்மையில் நடைபெற்றது.

இதில் தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்திய ஆர்ஜென்டினா 2-0 என்ற கோல் கணக்கில் அவுஸ்திரேலியாவை வீழ்த்தியது. ஆர்ஜென்டினா கப்டன் லயோனல் மெஸ்சி ஆட்டம் தொடங்கிய 79ஆவது விநாடிக்குள் சூப்பராக கோல் அடித்து அசத்தினார். அவரது கால்பந்து வாழ்க்கையில் அடிக்கப்பட்ட அதிவேக கோல்இதுதான் இதற்கு முன்பு கிளப்போட்டியில் 127 ஆவது விநாடியில் பந்தை வலைக்குள் அனுப்பியதே அவரது மின்னல் வேக கோலாக இருந்தது. மொத்தத்தில் மெஸ்சியின் 103 ஆவது சர்வதேச கோலாக இது பதிவானது. (4)



# 1100 ஆவது விக்கெட்டை வீழ்த்தி ஆண்டர்சன் புதிய மைல்கல்



ஆஷஸ் டெஸ்டின் மூன்றாவது நாளில் விக்கெட் வீழ்த்திய ஜேம்ஸ் ஆண்டர்சன் புதிய மைல்கல்லை எட்டினார்.

இங்கிலாந்து - அவுஸ்திரேலியா அணிகள் மோதி வரும் ஆஷஸ் முதல் டெஸ்டின் மூன்றாம் நாள் ஆட்டத்தில் அவுஸ்திரேலிய அணி தனது முதல் இன்னிங்ஸை ஆடி வருகிறது.

இங்கிலாந்தின் ஸ்டூவர்ட் பிராட், மொயீன் அலி தலா 2 விக்கெட்டுகளும் கப்டன் ஸ்டோக்ஸ் ஒரு விக்கெட்டும் வீழ்த்திய நிலையில் அனுபவ வீரர் ஆண்டர்சன் ஒரு விக்கெட் எடுக்க போராடினார்.

ஒருவழியாக அவுஸ்திரேலியாவின் ஸ்கோர் 338 ஆக இருந்தபோது, ஆண்டர்சன் ஓவரில் 66 ஓட்டங்களில் இருந்த அலெக்ஸ் கேரி போல்டானார்.

இந்த விக்கெட் மூலம் முதல்தர போட்டியில் 1100 விக்கெட்டுகள் எனும் புதிய மைல்கல்லை ஆண்டர்சன் எட்டினார்.

180 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ள ஜேம்ஸ் ஆண்டர்சன் 686 விக்கெட்டுகள் வீழ்த்தியுள்ளார். இதில் 32 முறை ஒரே இன்னிங்ஸில் 5 விக்கெட்டுகளை கைப்பற்றியுள்ளார். (4)

# facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2857

நந்திதா




சலாமா




றொபின்




காயத்திரி




வைத்தீஸ்




திருதசன்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மீண்டும் வலுப்பெற்றது

## ரூபாய் மதிப்பு

(கொழும்பு)

அமெரிக்க டொலருக்கு நிகரான ரூபாயு் மதிப்பு மீண்டும் வலுப்பெற்று ள்ளதாக இலங்கை மத்தியவங்கி அறிவித்துள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை டொலரின் விற்பனை விலை 319 ரூபாவாக காண ப்பட்ட நிலையில் நேற்று 315 ரூபாவாக பதிவாகியுள்ளது.

இதேவேளை கடந்த வெள்ளிக் கிழமை 300 ரூபாவாக பதிவாகியிரு ந்த டொலரின் கொள்விலை 297 ரூபாவாக குறைந்துள்ளமையும் சுட்டிக் காட்டத்தக்கது. (நி)

# விண்ணக வாழ்வில் 1ம் ஆண்டு நினைவஞ்சலி



ஓராண்டில் வந்து நிற்கும்
உம் நினைவலையில்
ஒரே குடும்பமாய்
நாம் கூடிநிற்கின்றோம்
அம்மா...!

நீங்கள் இன்றி கடந்த
இந்நாட்களை
இன்றைய நாளிதழில்
நாம் நினைத்துக்
கொள்கின்றோம் அம்மா...!

ஆண்டொன்று இன்று
கடந்து விட்டாலும்
ஆறவில்லை இன்னும்
எங்கள் துயரம்
வானோக்கி இறைவனிடம்
நீங்கள் சென்று விட்டாலும்
மறக்கவில்லை நாம்
நீங்கள் எங்களுடன்
இருந்த தருணம்...!

அன்பின் உறைவிடமே
அழியா எம் உறவின் அருள் வரமே
தாயாய் வந்தவளே
எம்மை தவமாய் வளர்த்தவளே
அழைத்து விட்டாரோ கடவுள்
தம்முடனே...!

மண்ணில் -02.06.1941 விண்ணில் -20.06.2022

அமரர்.

## இராசேந்திரம் எலிசபேத்தம்மா

வையத்துள் இவ்வாழ்வு போதுமென
வானோக்கி இறைவனிடம்
விரைந்து சென்று விட்டீர்
ஆண்டுகள் கடந்தாலும்
ஆண்டவன் காலடியில்
என்றும் உங்கள் ஆத்மா
சாந்தியடைய இறைவனை
நாள்தோறும்
பிரார்த்தித்துக் கொள்கின்றோம்.
அம்மா.

கிறிஸ்துவோடு நாம் இறந்தோமாயின்
அவரோடு வாழ்வோம் என்பதே நாம்
கொண்டுள்ள நம்பிக்கை (உரோ.6.8)

ஒளிமுகம் மறைத்து
இன்றுடன் ஓராண்டானது...!

(சி-6777)

லூர்துமாதா கோவிலடி,
தும்பளை, பருத்தித்துறை.

குடும்பத்தினர்.

# ரணிலின் ஆட்சிக் காலத்தில் தமிழ் மக்களுக்கு தீர்வு உறுதி

## ஐ.தே.க தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க நிச்சயம் வெற்றி பெறுவார் என்றும் அதன் பின்னரே தமிழ் மக்களுக்கான தீர்வு வழங்கப்படும் என ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான வஜிர அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

சமகால அரசியல் நிலவரம் தொடர்பில் ஊடகங்களிடம் கருத்து ரைக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்திருந்தார். ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சிக் காலத்தில் தமிழ் மக்களுக்கு நிச்சயம் தீர்வு ஏற்படுத்தப்படும்.

அடுத்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் என்பதில் எந்த மாற்றமும் இல்லை. தேர்தல் நிச்சயம் நடக்கும். இதில் ரணில் விக்கிரமசிங்க போட்டியிடுவார்.

அவர் எந்தக் கட்சியின் சார்பில் போட்டியிடுவார் அல்லது பொது வேட்பாளராக நிறுத்தப்படுவாரா என்பது குறித்து இன்னமும் தீர்மானிக்கப்பட வில்லை.

ஆனால், ரணில் விக்கிரம சிங்கவே நிச்சயம் வெற்றி பெறுவார். அவர் வெற்றி பெற்ற பின்னர் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காணப்படும் எனத் தெரிவித்தார். (நி)

# பேக்கரி பொருட்களின் விலையை 10 ரூபாவால் குறையுங்கள்

## அமைச்சர் நளின் பெர்னாண்டோ வலியுறுத்து

(கொழும்பு)


பாண் உள்ளிட்ட பேக்கரி பொருட்களின் விலையை 10 ரூபாவினால் குறைப்பது குறித்து பரிசீலிக்குமாறு பேக்கரி உரிமையாளர்களிடம் வர்த்தக, மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோ, கோரிக்கை விடுத்துள்ளார்.

பேக்கரி உரிமையாளர்களின் கோரிக்கைகளை பரிசீலித்து அரசாங்கம் பல சலுகைகளை வழங்கியுள்ளது என்றும் அமைச்சர் நளின் பெர்னாண்டோ சுட்டிக்காட்டியுள்ளார்.

அமைச்சரின் இந்த கோரிக்கை தொடர்பாக ஆராய்ந்து எதிர்வரும் நாட்களில் அறிவிப்பை வெளியிடுவதாக பேக்கரி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் என்.கே. ஜயவர்தன உறுதியளித்துள்ளார். (நி)

# கண்ணீர் அஞ்சலி

தோற்றம்-1947.11.02 மறைவு-2023.06.17



எமது கல்லூரி ஆசிரியை திருமதி.அருட்செல்வி சிறீதரன் அவர்களின் அன்புத் தந்தையார்

அமரர்.**தம்பிராசா சுந்தரலிங்கம்**

அவர்கள் காலமான செய்தியறிந்து ஆழ்ந்த துயர் அடைகின்றோம். அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். (16013)

அதிபர், ஆசிரியர்கள்,
யா/பொன்னாலை வரதராஜப் பெருமாள் வித்தியாசாலை.

# இராசிபலன்

20.06.2023
ஆனி 05, செவ்வாய்க்கிழமை
துதியை பிற்பகல் 12.53 மணிவரை
புனர்பூசம் முன்னிரவு 10.36 மணிவரை

சுபநேரம் -10.24-11.54 மணிவரை
இராகுகாலம்-2.54-4.24 மணிவரை

சந்திராஷ்டமம்-
கேட்டை ,மூலம்

வளவன்



**மேஷம்** உறவினர் வழியில் உள்ளம் மகிழும் சம்பவமொன்று நடைபெறும், புதிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, காரிய அனுகூலமுண்டு.



**கடகம்** தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், காரிய அலைச்சல்கள் சற்று அதிகரிக்கலாம், சுப விரயங்கள் மேலோங்கும் நாள்.



**துலாம்** தொழில் ரீதியாக சிலர் உங்களிடம் உதவி கேட்டு வரலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், உறவினர் வழியில் மன நிறைவான செய்தியொன்று வந்து சேரலாம்.



**மகரம்** கனிவாகப் பேசிக் காரியங்களை சாதித்துக் காட்டுவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், கௌரவமான சம்பவங்கள் இடம் பெறலாம்.



**ரிஷபம்** வியாபாரத்தை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.



**சிம்மம்** தொழிலில் வருமானத்தை அதிகரிக்க முற்படுவீர்கள், இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு,வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.



**விருச்சிகம்** எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், வழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள், செயற்பாடுகளில் விழிப்புணர்வு அவசியம், சிலர் கௌரவக்குறைவாக நடந்து கொள்ளலாம்.



**கும்பம்** புதிய பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள், செய்தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.



**மிதுனம்** உறவினர் வழியில் அன்புத் தொல்லைகள் ஏற்படலாம், மகிழ்ச்சி அதிகரித்து மனமாற்றம் காணும் நாள், விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு.



**கன்னி** புதிய திட்டங்கள் தீட்டி தொழிலில் ஆதாயம் காண முற்படுவீர்கள், கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், ஆடம்பரப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு.



**தனுசு** நீண்ட நாளைய விருப்பங்கள் நிறைவேறும் நாள், பொது வாழ்வில் கௌரவமான சம்பவங்கள் இடம் பெறலாம், நண்பர்கள் சந்திப்பால் பரவசமடைவீர்கள்.



**மீனம்** புதிய நபர்களின் சந்திப்பால் பொருளாதார நிலை உயரும், பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், தொலைபேசி வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம்.

கோபப்படாமல் இருந்து விடாதே கோமாளியாக்கி விடுவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வலி.வடக்கு காணிகளை சட்டரீதியாக மக்களிடம் கையளிக்க அளவீட்டுப் பணிகள் நேற்று ஆரம்பம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - வலிகாமம் வடக்கில் விடுவிக்கப்பட்ட மக்களின் காணிகளை சட்டரீதியாக விடுவிப்பதற்கான அளவீடுப் பணிகள், மயிலிட்டி பேச்சி அம்மன் ஆலயப் பிரதேசத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பிரசன்னத்துடன் நேற்று ஆரம்பமானது.

2013ஆம் ஆண்டு காலப் பகுதியில் இராணுவத்தினரின் பயன்பாட்டிற்காக அரசுடைமையாக்கும் நோக்கில் வெளியிடப்பட்ட வர்த்தமானியின் அடிப்படையில் அரச காணிகளிகளாக சுவீகரிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்ட சுமார் 6300 ஏக்கர் காணிகளில் கணிசமானவை தற்போது விடுவிக்கப்பட்டு காணி உரிமையாளர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

எனினும், குறித்த காணிகள் சட்ட ரீதியாக இப்போதும் அரச காணிகளாகவே காணப்படுகின்றமையினால், 2013 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட வர்த்தமானியை மீளப் பெறுகின்ற வகையில் புதிய வர்த்தமானி வெளியிடப்படவுள்ளது. இதற்காக குறித்த் காணி அளவீடு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த யாழ்ப்பாண மாவட்ட செயலாளர் அ.சிவபாலசுந்தரன் இரண்டு மாதங்களில் குறித்த பணிகள் நிறைவுக்கு வரும் என தெரிவித்தார்.

குறித்த நிகழ்வில் ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் இளங்கோவன், யாழ் மாவட்ட செயலக மேலதிக அரசாங்க அதிபர் (காணி) முரளிதரன், நில அளவைத் திணைக்கள மாகாண பணிப்பாளர், தெல்லிப்பழை பிரதேச செயலர், நில அளவை திணைக்கள உத்தியோகத்தர்கள் எனப்புலரும் கலந்துகொண்டனர். (4-6-33)

## சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கான தடுப்பூசி ஏற்றல்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட 11வட்டாரங்களிலும் நேற்று திங்கட்கிழமை தொடக்கம் ஜூலை மாதம் 04 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரையான 14 தினங்கள் வளர்ப்பு நாய்களுக்கான தடுப்பூசி ஏற்றப்படும் என சுகாதாரப் பகுதியினர் தெரிவித்துள்ளனர்.

அந்தவகையில் நேற்று திங்கட்கிழமை மீசாலை மேற்கு வட்டாரத்தில் ஆரம்பமான நிலையில் இன்று செவ்வாய்க்கிழமை மீசாலை மேற்கு மற்றும் மீசாலை கிழக்கு வட்டாரங்களிலும், நாளை புதன்கிழமை மீசாலை கிழக்கு வட்டாரத்திலும்,

நாளை மறுதினம் வியாழக்கிழமை மட்டுவில் வட்டாரத்திலும், 23 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சாவகச்சேரி வடக்கு வட்டாரத்திலும், 24 ஆம் திகதி சனிக்கிழமை சாவகச்சேரி நகர வட்டாரத்திலும், 26 ஆம் திகதி திங்கட்கிழமை சங்கத்தானை வட்டாரத்திலும், 27 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கோவிற்குடியிருப்பு வட்டாரத்திலும்,

28 ஆம் திகதி புதன்கிழமை மற்றும் 29 ஆம் திகதி வியாழன் ஆகிய இரு தினங்கள் கல்வயல் வட்டாரத்திலும், 30ஆம் திகதி வெள்ளிக்கிழமை நுணாவில் கிழக்கு வட்டாரத்திலும், ஜூலை 01 ஆம் திகதி சனிக்கிழமை நுணாவில் மத்தி வட்டாரத்திலும், ஜூலை 03 ஆம் திகதி திங்கட்கிழமை மற்றும் ஜூலை 04 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஆகிய இரு தினங்கள் நுணாவில் மேற்கு வட்டாரத்திலும் நாய்களுக்கான தடுப்பூசி ஏற்றப்படவிருப்பதாக அறிவித்துள்ளனர்.

இது தொடர்பான மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ள 077 1210649 எனும் தொலைபேசி இலக்கத்தினை தொடர்பு கொள்ள முடியும் எனவும் தெரிவித்துள்ளனர். (4-6-30)

## கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட ஒருவர் கரவெட்டியில் கைது



(கரணவாய்)

கரவெட்டியில் கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன் அவரிடம் இருந்து 10 லீற்றர் கசிப்பும் மீட்கப்பட்டதாக நெல்லியடிப் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை அப்பகுதியில் கசிப்பு விற்பனை இடம்பெறுவதாக நெல்லியடிப் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலை அடுத்து அங்கு சென்ற பொலிஸார் 10 லீற்றர் கசிப்புடன் 32 வயதுடைய இளைஞர் ஒருவரை கைது செய்துள்ளனர். (4-6-60)

## மல்லாகம் கோணப்புலம் ஞானவைரவர் ஆலய அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

மல்லாகம் கோணப்புலம் ஞானவைரவர் ஆலய அலங்கார உற்சவம் எதிர்வரும் 23 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 12 தினங்கள் நடைபெறவுள்ளது என ஆலய பரிபாலனசபை அறிவித்துள்ளது. (4)



இலங்கை முதலுதவிச்சங்க இந்துசமய தொண்டர் சபையினரின் சேவையைப் பாராட்டி தென்மராட்சி-வரணி சிட்டிவேரம் கண்ணகி அம்மன் ஆலய நிர்வாகத்தினரால் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

(படம்: சுபேசன்)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 240 | 140 | 200 |
| உருளைக்கிழங்கு | 180 | 180 | 170 | 200 |
| பச்சைமிளகாய் | 600 | 480 | 450 | 800 |
| தக்காளி | 280 | 300 | 250 | 320 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 220 | 200 | 240 |
| கோவா | 280 | 250 | 300 | 300 |
| கரட் | 360 | 380 | 380 | 450 |
| பூசணி | 120 | 80 | 100 | 120 |
| புடோல் | 150 | 160 | 200 | 300 |
| வாழைக்காய் | 100 | 140 | 100 | 120 |
| சின்ன வெங்காயம் | 350 | 360 | 400 | 400 |
| பெரிய வெங்காயம் | 110 | 130 | 130 | 140 |
| பாகற்காய் | 450 | 400 | 400 | 700 |
| வெண்டக்காய் | 250 | 160 | 140 | 300 |
| கருணைக் கிழங்கு | 130 | 200 | 200 | 240 |
| பயற்றங்காய் | 300 | 350 | 300 | 300 |
| லீக்ஸ் | 350 | 300 | 300 | 400 |
| பீற்றூட் | 400 | 350 | 350 | 400 |
| கறிமிளகாய் | 450 | 300 | 300 | 450 |
| முருங்கைக்காய் | 800 | 700 | 800 | 1000 |
| போஞ்சி | 550 | 450 | 450 | 500 |
| கத்தரிதம்புள்ள | 180 | 160 | — | 160 |
| கீரை - 1 பிடி | 60 | 50 | 40 | 600 |
| தேசிக்காய் | 350 | 350 | 350 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 90 | 80 | 70-100 |
| இராசவள்ளி | 350 | 260 | 250 | 300 |
| வெங்காயப் பூ | 450 | 450 | — | 800 |
| முள்ளங்கி | 160 | 160 | 180 | 250 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 80 | 50 |
| வல்லாரை | 50 | 35 | 40 | 50 |
| ஈரப்பலா | 180 | 200 | — | 200 |

## கஜேந்திரகுமார் எம்.பி கைது; மகளிர் அமைப்பு போராட்டம்



(கரணவாய்)

பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் மற்றும் அவரது கட்சி உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டு பொய் வழக்கு போடப்பட்டதாக தெரிவித்து மருதங்கேணி பொலிஸ் நிலைய நுழைவாயில் வீதி முன்பாக மகளிர் அமைப்புகளால் நேற்று திங்கட்கிழமை போராட்டம் ஒன்றும் முன்னெடுக்கப்பட்டது. பொலிஸாரின் அராஜகம் ஒழிக, மருதங்கேணி பொலிஸாரே பொய் வழக்கு போடாதே, இந்த மண் எங்களின் சொந்த மண், மருதங்கேணி எங்கள் சொத்து, அபகரிக்காதே அபகரிக்காதே நிலங்களை அபகரிக்காதே,

வடக்குக் கிழக்கு தமிழரின் தாயகம், கஜேந்திரகுமார் கைதுக்கு நீதி வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோஷங்களையும் முன்வைத்து முற்பகல் 10:30 மணியளவில் மருதங்கேணி பிரதேச செயலகம் முன்பாக போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. (4-6-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் இந்த வருடத்தில் நடக்கலாம்

## மஹிந்த தேசப்பிரிய நம்பிக்கை

(கொழும்பு)

**மாகாண சபைத் தேர்தல் அல்லது உள்ளூராட்சித் தேர்தல் ஆகிய இரண்டு தேர்தல்களில் ஒன்று இந்த வருடம் இடம்பெறும் என்ற நம்பிக்கை உள்ளதாக எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.**



அம்பலாங்கொட பிரதேசத்தில் ஊடகங்க ளுக்கு கருத்து தெரிவிக்கும் போதே முன்னாள் தேர்தல் ஆணையாளரும் எல்லை நிர் ணய ஆணைக்குழுவின் தலைவருமான மஹிந்த தேசப்பிரிய இவ்வாறு தெரிவித்துள்ளார்.

உலக ஜனநாயக தினமான செப்டெம்பர் 15ஆம் திகதிக்கு முன்னர் தேர்தலை நடத்துவது தொடர்பில் அரசாங்கம் தீர்மானம்.எடுக்கும் என எதிர்பார்ப்பதாக்வும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி)

# துஷ்பிரயோகங்கள் அதிகரிப்பதற்கு பெற்றோர்களே காரணம்

## மனநல மருத்துவர் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

நாட்டில், அண்மைய நாட்களில் சிறுவர் துஷ்பிரயோகங்கள் அதிகரித்து வருவதற்கு பெற்றோர்களே பிரதான காரணம் என கராப்பிட்டி போதனா வைத்தியசாலையின் மனநல மருத்துவர் ரூமி ரூபன் சுட்டிக்காட்டியுள்ளார்.

பெற்றோர்கள் பிள்ளைகள் மீதான அதீத அக்கறை வெளிப்படுத்தாத நிலைமை காரணமாகவே சிறுவர் துஷ்பிரயோகங்கள் அதிகரித்துள்ளதாக மருத்துவர் சுட்டிக்காட்டுகின்றார்.

துஷ்பிரயோகத்திற்கு உள்ளாகும் குழந்தைகளின் சமூகப் பின்னணியை எடுத்து நோக்கினால் இவர்களின் பெற்றோர்கள் பெரும்பாலும் வெளிநாடுகளுக்கு சென்றுள்ளனர்.

அல்லது பெற்றோர்கள் குழந்தைகளுடன் இருந்தாலும் சரியான கவனமும் புரிதலும் பாதுகாப்பும் கிடைப்பதில்லை என அவர் தெரிவித்தார். (நி)

# முட்டைக்கு தொடரும் தட்டுப்பாடு

(கொழும்பு)

சந்தையில் இன்னும் முட்டைக்கு தட்டுப்பாடு நிலவுகிறது .

வர்த்தமானி மூலம் முட்டைக்கான அதிகபட்ச சில்லறை விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ள போதிலும் அது நடைமுறைப்படுத்தப்படவில்லை என மக்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

அத்துடன் சந்தையில் கோழி இறைச்சியின் விலையை வர்த்தகர்கள் வேகமாக அதிகரித்துள்ளதால் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

குறிப்பாக ஒரு கிலோ கோழி



இறைச்சிக்கு 1,450 முதல் 1600 ரூபாய் வரை வர்த்தகர்கள் அறவிடுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கோழி இறைச்சியின் விலை மற்றும் பலவகையான உணவு வகைகளின் விலை உயர்வால் மக்கள் பெரிதளவில் பாதிக்கப்பட்டுள்ளனர். (நி)

# 40 இ.போ.ச டிப்போக்கள் மூடப்படும் அபாயம்

(கொழும்பு)

இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான நட்டத்தில் இயங்கும் டிப்போக்கள் மூடப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக சபையின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான 107 டிப்போக்களில் 40 டிப்போக்கள் தற்போது தொடர்ந்து நஷ்டத்தில் உள்ளதாகவும், அவற்றில் பெரும்பாலான டிப்போக்கள் கிராமப்புறங்களில் இருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

நஷ்டத்தில் இயங்கும் டிப்போக்களை மூடுவதற்கு முன் நஷ்டமடையாமல் இருக்க பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும், நடவடிக்கை தோல்வியடைந்தால் மூட வேண்டிய நிலை ஏற்படும் என்றும் அவர் தெரிவித்தார். (நி)

# ஆனி மாத இராசி பலன்கள் 16.06.2023-16.07.2023

## துலாம்

**மாற்றங்களை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று சொல்லும் துலாம் இராசி வாசகர்களே!**

ஆனி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, உங்கள் இராசி நாதன் சுக்கிரன் தொழில் ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். உங்கள் இராசியையும், சகாய ஸ்தானம் மற்றும் லாப ஸ்தானத்தையும் குரு பார்க்கிறார். எனவே தொழில் வளர்ச்சி மேலோங்கும். உடன் பிறந்தவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வளர்ச்சி கூடும். முக்கியப் பிரமுகர்களை சந்தித்து முன்னேற்றம் அதிகரிக்க வழிவகுத்துக் கொள்வீர்கள். மொத்தத்தில் எதிர்பார்ப்புகள் நிறைவேறும் மாதமாகவே இம்மாதம் அமையப் போகிறது.

**மிதுன - புதன்**

ஆனி 3ஆம் திகதி, மிதுன இராசிக்குப் புதன் செல்கிறார். அது அவருக்கு சொந்த வீடாகும். உங்கள் இராசிக்கு 9, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதன் பாக்கிய ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் இந்த நேரம் நன்மைகள் பலவும் நடைபெறும். நம்பிக்கைக்குரிய விதத்தில் நண்பர்கள் நடந்து கொள்வர். எதிர்காலத்தைப் பற்றிய பயம் அகலும். பாகப்பிரிவினைகள் சுமுகமாக நடைபெறும். பயணங்கள் சாதகமாக அமையும். உத்தியோகத்தில் கேட்ட சலுகைகள் கிடைப்பதோடு மட்டுமல்லாமல் கேட்ட இடத்திற்கும் மாறுதல் உண்டு.

**சிம்ம - செவ்வாய்**

ஆனி 17 ஆம் திகதி, சிம்ம இராசிக்கு செவ்வாய் செல்கிறார். உங்கள் இராசிக்கு தன - சப்தமாதிபதியானவர் செவ்வாய், அவர் லாப ஸ்தானத்தில் சஞ்சரிப்பது யோகம்தான். பொருளாதார நிலை உயரும். வெளிநாட்டு வணிகம் ஆதாயம் தரும். இளைய சகோதரத்தோடு இணக்கம் ஏற்படும். வியாபாரத்தில் புதிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். உத்தியோகத்தில் பணிநீக்கம் செய்யப்பட்டவர்கள் மீண்டும் பணியில் சேரும் வாய்ப்பு கிட்டும். சிம்மத்தில் இருக்கும் செவ்வாயை, குரு பார்ப்பதால் காரியங்கள் துரிதமாக நடைபெறும்.

**சிம்ம - சுக்கிரன்**

ஆனி 18 ஆம் திகதி, சிம்ம இராசிக்கு சுக்கிரன் செல்கிறார். அவர் அங்குள்ள செவ்வாயோடு இணைந்து "சுக்கிர மங்கல யோக"த்தை உருவாக்குகிறார். அதே நேரம் குருவின் பார்வை பதிந்த செவ்வாயின் பார்வை, சனி மீது விழுகின்றது. இது நன்மைதான். சகாய ஸ்தானாதிபதியான குருவின் பார்வை உங்கள் ராசியில் பதிவதன் மூலம் பல வழிகளிலும் உங்களுக்கு நன்மைகள் கிடைக்கும். பிள்ளைகளின் உயர்கல்வி சம்பந்தமாக எடுத்த முயற்சி பலன்தரும். அக்கம் பக்கத்தில் உள்ளவர்களின் ஆதரவு கிடைக்கும். பூர்வீகச் சொத்துக்களை விற்றுவிட்டுப் புதிய சொத்துக்கள் வாங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கடக - புதன்**

ஆனி 19 ஆம் திகதி கடக இராசிக்கு புதன் வருகிறார். உங்கள் இராசிக்கு 9, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். அவர் தொழில் ஸ்தானத்திற்கு வரும்போது சரிந்து கிடந்த தொழில் சகஜ நிலைக்கு வரும். நல்ல சம்பவங்கள் இல்லத்தில் நடைபெறும். வெளிநாடு தொடர்பான சிந்தனைகள் வெற்றிபெறும். பணி ஓய்விற்குப் பிறகும் சிலருக்கு வேலை கிடைக்கும். உத்தியோகத்தில் உயர் அதிகாரிகளின் ஆதரவோடு பழைய பிரச்சினைகளில் இருந்து விடுபடுவீர்கள். தொழில் நடத்துபவர்கள் புதிய கூட்டாளிகளை இணைத்துக்கொண்டு லாபம் குவிக்க வழிவகுத்துக்கொள்வர். பொதுவாழ்வில் உள்ளவர்களுக்கு பொறுப்புமிக்க பதவிகள் கிடைக்கலாம். வியாபாரம், தொழில் புரிபவர்கள் புதிய ஒப்பந்தங்களால் மகிழ்ச்சி அடைவர். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு மறுக்கப்பட்ட சலுகைகள் மீண்டும் கிடைக்கும். கலைஞர்களுக்கு மதிப்பு, மரியாதை உயரும். மாணவ-மாணவிகளுக்கு கல்வி முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சி பலன்தரும். பெண்களுக்கு ஆரோக்கியம் சீராகும். அருகில் இருப்பவர்களின் ஆதரவு கிடைக்கும். கரைந்த சேமிப்புகளை ஈடுகட்டுவீர்கள்.

## விருச்சிகம்

**வழிபாட்டின் மூலம் வளர்ச்சி அதிகரிக்கும் என்று சொல்லும் விருச்சிக இராசி வாசகர்களே!**

ஆனி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் செவ்வாய், சுக்கிரனோடு இணைந்து "சுக்கிர மங்கல யோக"த்தை உருவாக்குகிறார். குருவின் பார்வை தனஸ்தானம்மற்றும்தொழில்ஸ்தானத்தில் பதிகின்றது. எனவே தொழில் வளர்ச்சி சிறப்பாக இருக்கும். புதிய திட்டங்கள் தீட்டி அதில் வெற்றி காண்பீர்கள். பொருளாதாரத்தில் நிறைவு ஏற்படும். வி.ஐ.பிக்கள் உங்கள் விருப்பங்களை நிறைவேற்றக் காத்திருப்பர். வியாபாரம், தொழில் வெற்றிநடை போடும். அர்த்தாஷ்டமச்சனியின் ஆதிக்கம் இருப்பதால் விரயங்கள் அதிகரிக்கலாம். எனவே சுப விரயங்களை மேற்கொள்வது நல்லது.

**மிதுன - புதன்**

ஆனி 3- ஆம் திகதி, மிதுன இராசிக்கு புதன் செல்கிறார். அது அவருக்கு சொந்த வீடாகும். அஷ்டமத்திற்கு புதன் வரும்போது மறைந்த புதனால் நிறைந்த தனலாபம் கிடைக்கும் என்பதால் பொருளாதாரப் பற்றாக்குறை அகலும். புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள். நல்ல சந்தர்ப்பங்கள் நாடிவரும். லாபாதிபதியாகவும் புதன் விளங்குவதால் வியாபாரத்தில் புதிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். உத்தியோகத்தில் உங்கள் கருத்துக்களை மேலதிகாரிகள் ஏற்றுக்கொள்வர். பரிசீலனையில் இருந்த பதவி உயர்வு இப்பொழுது கிடைக்கும்.

**சிம்ம - செவ்வாய்**

ஆனி மாதம் 17 ஆம் திகதி, சிம்ம இராசிக்கு செவ்வாய் செல்கிறார். உங்கள் இராசிக்கு அதிபதியான செவ்வாய் தொழில் ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். அவர் மீது குருவின் பார்வை பதிவதால் புதிய திட்டங்கள் நிறைவேறும். முக்கியப் பிரமுகர்கள் உங்கள் முன்னேற்றத்திற்கு வழிகாட்டுவர். சந்தர்ப்பங்கள் சாதகமாக அமையும். வெளிநாட்டு நிறுவனங்களில் வேலை கிடைப்பதற்கான அறிகுறிகள் தென்படும். அரசாங்க ஆதரவும் எதிர்பார்த்தபடி கிடைக்கும். இக்காலம் உங்களுக்கு இனிய காலமாக அமையும்.

**சிம்ம - சுக்ரன்**

ஆனி 18 ஆம் திகதி; சிம்ம இராசிக்கு சுக்கிரன் செல்கிறார். அங்குள்ள செவ்வாயோடு இணைந்து "சுக்கிர மங்கல யோக"த்தை உருவாக்குகிறார். மேலும் 6இற்கு அதிபதி செவ்வாய், 10இற்கு அதிபதி சுக்கிரனோடு இணைவதால் "விபரீத ராஜ யோக"மும் செயற்படும். குருவின் பார்வை பதிந்த செவ்வாயின் பார்வை, சனி மீது விழுகிறது. எனவே ஆரோக்கியம் சீராகும். உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள். மனக்குழப்பம் அகன்று மகிழ்ச்சி கூடும். பணப்புழக்கமும் சரளமாக இருக்கும். உத்தியோகத்தில் உயர் அதிகாரிகளின் அன்பிற்கு பாத்திரமாவீர்கள்.

**கடக - புதன்**

ஆனி 19 ஆம் திகதி, கடக இராசிக்கு புதன் செல்கிறார். உங்கள் இராசிக்கு அஷ்டம - லாபாதிப்பதியானவர் புதன். அவர் பாக்கிய ஸ்தானத்திற்கு வருவது யோகம் தான். வராத பாக்கிகள் வசூலாகும். வந்த தொகை சேமிப்பாகும். உத்தியோகத்தில் உடன் பணிபுரிபவர்கள் ஆதரவு திருப்தி தரும். கூடுதல் பொறுப்புகளை உங்களிடம் ஒப்படைத்தாலும் அதற்கேற்ப சம்பள உயர்வும் கூடும். ஆன்மிகப் பயணங்களில் ஆர்வம் காட்டுவீர்கள். பணியாளர்கள் கடமை உணர்வுடன் செயற்படுவர். பொதுவாழ்வில் உள்ளவர்களுக்கு மேலிடத்தில் இருந்து நல்ல தகவல் கிடைக்கும். வியாபாரம், தொழில் செய்பவர்கள் முக்கியப் புள்ளிகளின் ஆலோசனையால் முன்னேற்றம் காண்பர். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு மேலதிகாரிகளின் பாராட்டு மகிழ்ச்சி தரும். கலைஞர்களுக்கு வெளிநாட்டு அழைப்பு வரலாம். மாணவ-மாணவிகளுக்கு கல்வியில் திருப்தி ஏற்படும். பெண்களுக்கு எதிர்பார்த்த இடத்தில் இருந்து உதவிகள் கிடைக்கும். பணிபுரியும் இடத்தில் உயர் அதிகாரிகள் உங்கள் கோரிக்கையை நிறைவேற்றுவர்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 1

காவியத் தொடர் 208





டான். முகம் களையாயிருந்தது. ஊக்கமும் உள்வலியும் கொண்டவன் என்று தெரிந்தது.." "உன்னிடம் என்ன கேட்டான்?"

"சக்கரவர்த்தியின் உடல் நிலைமையைப் பற்றிக் கேட்டான். அடுத்தபடி பட்டத்துக்கு வர வேண்டியவரைப் பற்றிக் கேட்டான். இலங்கை சென்றிருக்கும் இளவரசரைப் பற்றிக் கேட்டான்.பிற்பாடு, குடந்தை ஜோதிடரிடமும் அதே கேள்விகளைக் கேட்டதாக அறிந்தேன்"

"ஆகா! குடந்தை ஜோதிடர் வீட்டுக்கு அவன் வந்திருந்தானா?"

"இப்போது ஞாபகம் வருகிறது. தாங்கள் ஜோதிடரின் வீட்டில் இருந்த போதே அவன் துடபுடல் செய்து கொண்டு உள்ளே வந்து விட்டானாம்.. நல்லவேளையாகத் தங்களை அவன் தெரிந்து கொள்ள வில்லையாம்!" "நான் நினைத்தது சரியாய்ப் போயிற்று."

"என்ன தாயே நினைத்தீர்கள்?" "அந்த முரட்டு வாலிபனுக்குச் சீக்கிரம் ஏதாவது ஆபத்து வரலாம் என்று நினைத்தேன்."

"தாங்கள் நினைத்தது சரிதான். அவன்தான் ஒற்றன் என்று சந்தேகிக்கிறேன். அவனைப் பிடிப்பதற்குத்தான் பழுவேட்டரையர்கள் பரிசு கொடுப்பதாகப் பறையடித்திருக்கிறார்கள் என்று தோன்றுகிறது."

"திருமலை! எனக்கு ஓர் உதவி செய்வாயா?"

"கட்டளையிடுங்கள் தாயே!"

"அந்த வாலிபனை நீ எப்போதாவது பார்க்க நேர்ந்தால்."

"பிடித்துக் கொடுத்துப் பரிசு பெற்றுக் கொள்ளட்டுமா?"

"வேண்டாம், வேண்டாம்! என்னிடம் அழைத்துக் கொண்டு வா! அவனிடம் எனக்கு முக்கியமான காரியம் ஒன்று இருக்கிறது."

ஆழ்வார்க்கடியான் அதிசயம் அடைந்தவனைப் போல் சிறிது நேரம் குந்தவைப் பிராட்டியைப் பார்த்துக் கொண்டு நின்றான். பின்னர், "அதற்கு அவசியம் ஏற்படாது, தாயே! நான் அவனைத் தேடிப் பிடித்து வர அவசியம் நேராது. அவனே தங்களைத் தேடிக் கொண்டு வந்து சேருவான்!" என்றான்.

நான் உன்னைக் காட்டிக் கொடுத்து விடுவேன் என்ற எண்ணம் இல்லையே?"

"கிருஷ்ணா! கிருஷ்ணா! அப்படியெல்லாம் ஒன்றுமில்லை வீரநாராயணபுரத்தில் ஒரு வீர வாலிபனைப் பார்த்தேன். அவன் தஞ்சாவூர் போகிறதாகச் சொன்னான். எதற்காகவென்று சொல்லவில்லை. என்னைப் பல கேள்விகள் கேட்டான்."


குந்தவை பரபரப்புடன், "அவன் எப்படியிருந்தான்?" என்றாள்.

"பெரிய குலத்தில் பிறந்தவனைப் போல் காணப்பட்

### நாற்பத்தேழாம் அத்தியாயம்
### ஈசான சிவபட்டர்

ஆழ்வார்க்கடியான் அரசிளங்குமரியைப் பார்த்துவிட்டு அவனுடைய தமையனார் ஈசான சிவ பட்டரின் வீட்டுக்குச் சென்றான். அவருடைய வீடு வடமேற்றளி சிவன் கோயிலுக்கு மிக அருகில் இருந்தது. அரண்மனையிலிருந்து அரைக் காத தூரம் இருக்கும். சோழ மாளிகையிலிருந்து வடமேற்றளி ஆலயத்துக்குப் போனால், பழையாறை நகரின் விஸ்தீரணத்தையும் அதன் மற்றச் சிறப்புக்களையும் ஒருவாறு அறியலாம்.

கிருஷ்ண ஜயந்திக் கொண்டாட்டங்கள் எல்லாம் ஒருவாறு அடங்கி விட்டன என்பதை ஆழ்வார்க்கடியான் பார்த்துக் கொண்டு போனான். (தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## கருநாகபாம்பும் காகமும்

அவர்களிடம் யோசனை கலந்து இந்தக் கருநாகத்தை நிச்சயமாக என்னால் ஒழித்துக் கட்ட முடியும்" என்று ஆவேசத்துடன் கூறியது ஆண் காகம்.



பிறகு பெண் காகத்தை பார்த்து "பாம்பைக் கொல்ல உடனடியாக நடவடிக்கை மேற்கொண்டாக வேண்டும். நீ பத்திரமாக இரு. நான் நண்பன் ஒருவனைச் சென்று பார்த்துத் விட்டு விரைவில் திரும்பி வருகிறேன்" என்று கூறி விட்டுப் புறப்பட்டது.

சிறிது தொலைவில் வசித்து வந்த ஒரு நரி காகத்தின் நெருக்கமான நண்பன். நல்ல அறிவாற்றலும் தந்திர சுபாவமும் படைத்த அந்த நரியைத் தேடிக் கொண்டு காகம் அங்கு போய்ச் சேர்ந்தது.

நரி தன் நண்பன் காகத்தை மகிழ்சியுடன் வரவேற்றது.

"நண்பனே, நான் வாழும் மரத்தடியில் வசிக்கும் கருநாகம் செய்யும் அட்டூழியத்தை எல்லாம் மனவேதனையுடன் நரியிடம் எடுத்துக்கூறி, அதை கொல்வதற்கு நீ தான் எனக்கு ஏதாவது ஒரு உதவி கூற வேண்டும்" என்று கேட்டுக் கொண்டது.

நரியும் நல்ல உபாயம் ஒன்றைக் காகத்திற்குக் கூறி, "நண்பனே, இந்த யோசனையைச் செயற்படுத்து கருநாகத்தின் ஆயுள் முடிந்து விடும்" என்று சொல்லியது. காகம் நண்பன் நரியிடம் விடை பெற்றுக் கொண்டு உடனே அதன் யோசனையைச் செயற்படுத்து முயற்சியினைத் தொடங்கியது.

அந்த நாட்டின் அரசி வழக்கமாக நீராடும் குளக்கரைக்குச் சென்று காகம் ஒரு மரத்தில் மறைவாக அமர்ந்து அரசியின் வருகைக்காக காத்துக் கொண்டிருந்தது. சற்று நேரத்திற்கெல்லாம் அரசி தனது தோழிகளுடன் குளத்திற்கு வந்து சேர்ந்தாள்.

தன்னுடைய விலை உயர்ந்த ஆபரணங்களையெல்லாம் கழற்றிக் கூரை மீது வைத்து விட்டு அரசி நீராடுவதற்காக குளத்தில் இறங்கினாள்.

காகம் உடனே பறந்து வந்து மிகவும் மதிப்பு மிக்க முத்துத் மாலை ஒன்றைத் தனது அலகால் கொத்தி எடுத்துக் கொண்டு பறந்தோடியது. அந்த எதிர்பார்பாராத நிகழ்ச்சியைக் கண்டு அதிர்ச்சி அடைந்த அரசியும் தோழிகளும் கூக்குரலிட்டனர். உடனே சில தோழிகள் சென்று காவலர்களிடம் நடந்த நிகழ்ச்சியைக் கூறினார்கள்.

காவலகள் பறந்து செல்லும் காகத்தை துரத்திக் கொண்டு கூச்சலிட்டவாறு பின் தொடர்ந்து சென்றார்கள். காகம் பறந்தவாறு நேராக தான் குடியிருக்கும் ஆல மரத்திற்குச் சென்றது. அதற்குள் காவலர்கள் அந்த மரத்தருகே வந்து சேர்ந்தார்கள்.

காகம் தனது அலகில் கொத்திப் பிடித்திருந்த அரசியின் அணிகலனை காவலர்கள் கண் பார்வையில் படும் விதமாக கருநாகத்தின் பொந்துக்குள் போட்டு விட்டது.

காவலர்கள் கரும்பாம்புப் புற்றை இடித்துத் நகையை தேடினார்கள். புற்றுக்குள் இருந்த கருநாகம் சீறிக் கொண்டு வெளியே வந்தது. காவலர்கள் அந்தக் கருநாகத்தைக் தடியால் அடித்துக் கொன்றனர்.

பிறகு புற்றை நன்றாக இடித்து பெயர்த்து அரசியின் அணிகலனைத் தேடி எடுத்துக் கொண்டு சென்று விட்டனர்.

அதன் பிறகு அந்தக் காகக் குடும்பம் நிம்மதியாகவும், மகிழ்ச்சிச்யுடனும் வாழ்க்கை நடத்த் தொடங்கியது.

(முற்றும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை ஊடுருவும் சூரிய ஒளி போன்றது. அதை யாராலும் மூடிமறைக்க முடியாது.
– மில்டன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## காலம் வழங்குகின்ற தீர்ப்பில் செய்த தவறுகள் உணரப்படும்

அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும் என்கிறது சிலப்பதிகாரம்.

இங்கு அரசியல் என்பது தனித்து அரசியலை மட்டும் குறிப்பதன்று.

மாறாக யார் யார் தமக்குரிய தர்மத்தினின்றும் விலகுகிறார்களோ அவர்கள் அத்தனை பேரையும் அறம் தண்டிக்கும்.

எனவே நாம் செய்கின்ற தொழிலைத் தெய்வமாகப் போற்றிச் செய்தல் வேண்டும்.

அதிலிருந்து விலகும்போது அறம் ஏதோ வொரு வடிவத்தில் உரிய தண்டனையை வழங்கும்.

இவ்வாறு அறம் வழங்குகின்ற தண்டனையை காலம் என்ற நீதிமன்றம் கணக்கிட்டு தீர்ப்பாக வழங்குகிறது.

ஆக, காலம் என்ற நீதிமன்றத்தின் தீர்ப்பு வெளியாகும்போது; உரிய தண்டனையை அறம் உரியவாறு வழங்கி தனது பணியை நிறைவுபடுத்தும்.

ஆம், 69 இலட்சம் வாக்குகளைப் பெற்று ஜனாதிபதியாகப் பதவியேற்ற கோட்டாபய ராஜபக்ஷவுக்கான தீர்ப்பை காலம் எனும் நீதிமன்றம் வழங்க அறமானது, மக்கள் பேரெழுச்சியாக எழுந்து அவரை ஓடோடத் துரத்தியது.

உண்மை. இனி ராஜபக்ஷ தரப்பை எவராலும் அசைக்க முடியாது. அடுத்துவரும் முப்பது ஆண்டுகளுக்கு ராஜபக்ஷ தரப்பே ஆட்சி செலுத்தும் என்பது அரசியல் விற்பன்னர்களின் கருத்தாக இருந்தது.

அந்தக் கருத்து நிலை ஏற்பட்டபோதுதான் மகிந்த ராஜபக்ஷவின் தந்தையார் ராஜபக்ஷவின் உருவச்சிலையை சிங்கள மக்கள் அடித்து உடைத்து இழுத்து விழுத்தினர். அவர்களின் பூர்வீக வீடு தீயிடப்பட்டது. அவர்கள் நாட்டை விட்டுத் தப்பி ஓடினர்.

அதிலும் கோட்டாபய ராஜபக்ஷவைப் பார்த்து உங்களை எங்கள் நாடு ஏற்றுக் கொள்ளாது எனப் பல நாடுகள் மறுத்துவிட்டன.

அதனால் எங்கு செல்வது, எங்கு தங்குவது என்று தெரியாமல் திக்குமுக்காடுகின்ற அளவில் நிலைமை உருவாகியது.

இவ்வாறான நிலைமையைத்தான் இளங்கோ அடிகள் அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும் எனக் கூறிவைத்தார்.

ஆயினும் இது கண்டு இன்னமும் திருந்தாத பேரினவாதப் பேய்கள் இருப்பதுதான் மிகப்பெரிய அபத்தம்.

குறிப்பாக சரத் வீரசேகர, விமல் வீரவன்ஸ, விதுர விக்கிரமநாயக்க போன்றவர்கள் இன்னமும் இனவாதத் தீயை மூட்டுவதில் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.

ஆனால் ஒன்றை மட்டும் நாம் துணிந்து கூறிக் கொள்ள முடியும்.

அதாவது, எனது தந்தையார் எஸ்.டபிள்யூ. ஆர்.டி.பண்டாரநாயக்க அவர்கள் தனிச் சிங்களச் சட்டத்தைக் கொண்டு வந்தது மிகப் பெரும் தவறு என அவரது மகள் சுனேத்திரா பண்டாரநாயக்க அண்மையில் கூறியுள்ளார்.

ஆக, காலம் எனும் நீதிமன்றம் பண்டாரநாயக்க குடும்பத்துக்கு வழங்கிய தண்டனைத் தீர்ப்பு அவர்கள் விட்ட தவறை உணர வைத்துள்ளது.

எனவே இந்த நியதியில் இருந்து எவரும் தப்பமுடியாது என்பதுதான் இங்கு கவனிக்கப்பட வேண்டிய விடயம்.

# ஊழல் எதிர்ப்பு சட்டமூலத்தை ஏற்றுக் கொள்ள முடியாது

## ஐக்கிய மக்கள் சக்தி தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டிலிருந்து திருடப்பட்ட பணத்தை மீட்பதற்கும் சம்பந்தப்பட்டவர்களுக்கு தண்டனை வழங்குவதற்கும் போதிய ஏற்பாடுகள் உள்ளடக்கப்படாத காரணத்தினால் ஊழல் எதிர்ப்பு சட்டமூலத்தை ஏற்றுக் கொள்ள முடியாது என ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

இவ்வாறான காரணங்களால் ஊழலுக்கு எதிரான சட்டமூலத்திற்கு ஆதரவளிக்க தமது கட்சியினால் முடியாது என அதன் தேசிய அமைப்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

ஊழல் எதிர்ப்புச் சட்டமூலத்தை எதிர்வரும் 21 ஆம் திகதி பாராளுமன்றத்தில் விவாதித்து நிறைவேற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

### காற்று மாசுபாடு அதிகரிப்பு

## முகக்கவசம் அணியுமாறு பொதுமக்களுக்கு அறிவுறுத்தல்

(கொழும்பு)

இதய நோயாளிகளின் எண்ணிக்கை இலங்கையில் அதிகரிக்கும் அபாயம் காணப்படுவதால் மக்கள் முகக்கவசம் அணியுமாறு கொழும்பு தேசிய வைத்தியசாலையின் இதயநோய் தொடர்பான நிபுணர் டாக்டர் அனிது பத்திரன தெரிவித்துள்ளார்.

இலங்கையில் அதிகரித்துவரும் காற்று மாசுபாடு இதய நோயாளிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க வழி வகுத்துள்ளது.

இந்நிலைமை தொடர்பில் மக்கள் அவதானம் செலுத்த வேண்டும். வெளியில் செல்லும்போது கூடுமானவரை முகக்கவசம் அணிவது சிறந்தது.

மேலும் காற்று மாசுபாடு இதய நோயை மட்டுமல்ல, உயர் இரத்த அழுத்தம், கொலஸ்ட்ரோல், நீரிழிவு, புற்றுநோய் மற்றும் நீண்டகால நுரையீரல் நோய்கள் போன்ற தொற்றாத நோய்களையும் ஏற்படுத்துகிறதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ம-7)

## அலங்கார உற்சவம்

யாழ்ப்பாணம்கோட்டை ஸ்ரீ முனியப்பர் தேவஸ்தான சோபகிருது வருட மணவாளக் கோல அலங்கார உற்சவ விஞ்ஞாபனமானது இன்று விஷேட பூஜைகளுடன் ஆரம்பமாகி தொடர்ந்து 28 தினங்கள் பக்திபூர்வமாக இடம்பெறவுள்ளது.

இவ் உற்சவந்தனில் எதிர்வரும் 14 ஆம் திகதி ரத பவனியும் மறுநாள் தீர்த்தோற்சவமும் இடம் பெறும்.

மேலும் இவ் ஆலய மகோற்சவந்தனில் அன்னதானம் செய்வதற்கான நிதி சேகரிப்பிற்காக எவரும் நியமிக்கப்படவில்லை என ஆலய பரிபாலகர் சுட்டிக்காட்டியுள்ளார். (ம-7)

## புதையல் தோண்ட முற்பட்ட மூவர் முல்லையில் கைது

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு புதுமாத்தளன் பகுதியில் புதையல் தோண்ட முற்பட்ட மூவரை முல்லைத்தீவு பொலிஸார் கைது செய்துள்ளனர். இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை இடம்பெற்றுள்ளது.

குறித்த நபர்கள் புதுமாத்தளன் பகுதியில் புதையல் தோண்டுவதற்காக சாரயப் போத்தல்கள் மற்றும் பூசைக்குரிய பொருட்களுடன் மண்வெட்டி சவல் என்பனவற்றை பயன்படுத்தி புதையல் இருப்பதாக சந்தேகிக்கப்படும் இடத்தில் பூசை நடத்தி புதையல் தோண்ட முற்பட்டுள்ளனர்.

இது தொடர்பாக முல்லைத்தீவு பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைய சம்பவ இடத்திற்குச் சென்ற முல்லைத்தீவு பொலிஸார் புதையல் தோண்ட முற்பட்டவர்களை கைது செய்துள்ளதுடன் தோண்டுவதற்கு பயன்படுத்திய பொருட்களையும் கைப்பற்றியுள்ளனர்.

சந்தேக நபர்களையும் சான்றுப் பொருட்களையும் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தும் நடவடிக்கையில் முல்லைத்தீவு பொலிஸார் ஈடுபட்டுள்ளனர். (ம-7)

### ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில்

## வாகன விபத்துக்களால் 1,043 பேர் உயிரிழப்பு

ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் வாகன விபத்துக்கள் காரணமாக ஆயிரத்து 43 பேர் உயிரிழந்தனர்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் வைத்து வாகன மற்றும் வீதி பாதுகாப்புக்கு பொறுப்பான பிரதி பொலிஸ்மா அதிபர் இந்திக ஹப்புகொட இதனைக்குறிப்பிட்டுள்ளார்.

992 வாகன விபத்துக்களில் இந்த உயிரிழப்புகள் பதிவாகியுள்ளதாக அவர் தெரிவித்தார்.

2020ஆம் ஆண்டு காலப்பகுதியில் நாட்டில் 23 ஆயிரத்து 704 வாகனங்கள் பதிவாகியிருந்ததுடன் 2 ஆயிரத்து 370 பேர் குறித்த விபத்துக்களில் உயிரிழந்தனர். கடந்த ஆண்டு வாகன விபத்துக்களில் வீழ்ச்சி காணப்பட்ட போதிலும் தற்போது வாகன விபத்துக்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக வாகன மற்றும் வீதி பாதுகாப்புக்கு பொறுப்பான பிரதி பொலிஸ்மா அதிபர் இந்திக ஹப்புகொட தெரிவித்துள்ளார். (ம-7)

## முல்லையில் விபரீத முடிவெடுத்த பட்டதாரி இளைஞன் மரணம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவில் பட்டதாரி இளைஞன் ஒருவர் விபரீத முடிவெடுத்த நிலையில் உயிரிழந்துள்ளார். இச்சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.

முல்லைத்தீவு குமுளமுனைப் பகுதியில் வசிக்கும் சதாசிவம் முரளிதரன் என்ற 28 வயது பட்டதாரி இளைஞனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த இளைஞன் இலங்கையில் கிழக்கு பல்கலைக்கழகத்தில் 2022 ஆம் ஆண்டு பட்டப்படிப்பை நிறைவு செய்துள்ளார். இச்சம்பவம் தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

## ராஜபக்ஷவினர் கொள்ளையடிக்கவில்லை

### குற்றச்சாட்டை மறுத்த நாமல்

போட் சிட்டி அபிவிருத்தித் திட்டத்தை இடை நடுவில் நிறுத்தி ராஜபக்ஷவினரே கொள்ளையடித்ததாக சிலர் கூறுவதை ஏற்றுக் கொள்ள முடியாதென பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், போட் சிட்டி அபிவிருத்தித் திட்டத்தை இடை நடுவில் நிறுத்தி, ராஜபக்ஷவினர் கொள்ளையடித்ததாகக் கூறினார்கள். அது தொடர்பாக தேடிப்பார்த்த பின்னர் ராஜபக்ஷக்கள் கொள்ளையடிக்கவில்லை என்று கூறிமீண்டும் போட் சிட்டி திட்டத்தை ஆரம்பித்தார்கள்.

இன்று ராஜபக்ஷக்களால் செய்யப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களினால் நாட்டுக்கு நஷ்டம் என்று கூறுகிறார்கள்.

உண்மை தான். விமானங்கள் வந்திறங்கும் விமான நிலையத்தை நெற்களஞ்சிய சாலையாக மாற்றினால் நஷ்டம் ஏற்படத்தானே செய்யும். இதுதான் எமது நாட்டின்அரசியல்கலாசாரம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-7)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை புதன்கிழமை காலை 8.30 **மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை வவுனியா பிரதேசத்தில்** மகாறம்பைக்குளப் பிரதேசத்தில் மின்சாரம் தடைப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்மடுக்குளம் அபிவிருத்தி துரித கதியில் முன்னெடுப்பு



(தருமபுரம்)

கிளிநொச்சி மாவட்டத்தின் மூன்றாவது பாரிய குளமான கல்மடுக்குள அபிவிருத்திப் பணிகள் விரைவாக நடைபெற்றுவருகின்றன.

கடந்த 17 ஆம் திகதி அபிவிருத்திப்பணிகளை பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், விவசாய பிரதிநிதிகள் மற்றும் பிரதிநீர்ப்பாசன பணிப்பாளர்,நீர்ப்பாசன பொறியியலாளர்களுடன் இணைந்து பார்வையிட்டு விடயங்களையும் கேட்டு அறிந்து கொண்டார். (4-6-316)



கல்வியங்காடு ஞானபாஸ்கரோதய முன்பள்ளியில் புதிதாக அமைக்கப்பட்ட திறன் வகுப்பறையின் திறப்பு விழா கடந்த 15 ஆம் திகதி முன்பள்ளியின் தலைவர் இளைப்பாறிய உதவிக் கல்விப் பணிப்பாளர் இ.இராஜேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது. (படம்- சிவசாந்தன்)

### யாழில் கடலட்டை பண்ணைகள்

# வடக்கு-கிழக்கில் சீனா வேரூன்றுவதற்கான வெள்ளோட்டம்

## இலங்கை தொழிலாளர் சமூகங்களின் கூட்டமைப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கில், சீனா தனது ஆதிக்கத்தினை செலுத்தி வேரூன்றி நிற்பதற்கான முன்னோட்டமே யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்டுள்ள கடலட்டை பண்ணைகள் என அகில இலங்கை தொழிலாளர் சமூகங்களின் கூட்டமைப்பின் தேசிய அமைப்பாளர் என்.வி. சுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.

நேற்று அவரது இல்லத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்:

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சீன நிறுவனத்தின் வெள்ளோட்டமான செயற்பாடே இதுவாகும்.

அத்துடன், சீனா ஆதிக்கம் செலுத்துவதற்கும் வடகிழக்கில் வேரூன்றி நிற்பதற்கான முன்னோட்டமாக இது காணப்படுகின்றது.

மக்களின் எதிர்ப்புக்களை கண்டவுடன் வேறு வேறு கதைகளை கூறி ஏமாற்றுகின்றனர். ஆயினும் இதற்கும் சீன நிறுவனத்திற்கும் முக்கியமான தொடர்பு உள்ளது.

இந்தியா எப்பொழுதும் தனது நேச நாடான இலங்கையை தனது கையிற்குள் வைத்து இருக்கவே விரும்பும். இருந்தும் இந்தியாவின் எதிரியான சீனா இலங்கைக்குள் வருவதை அந்த நாடு விரும்பாது.

அவ்வாறான நிலையில், இலங்கைக்கும் இந்தியாவிற்கும் வெளிக்காட்டா விடிலும் உள்ளே சின்ன விரிசல் காணப்படும்.

மோடி எமது நாட்டிலுள்ள வளங்களை பாதுகாப்பதற்கு அப்பால் எமது நாடு எம்முடைய கடல் வளங்களை பாதுகாப்பதற்கு முன்வர வேண்டும் எனவும் தெரிவித்தார். (4)

### தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி

# நிறுவுநர் நினைவு தினமும் பரிசளிப்பு விழாவும்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் நிறுவுநர் நினைவு தினமும் பரிசளிப்பு விழாவும் எதிர்வரும் 25 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு பாடசாலை அதிபர் ம.மணிசேகரன் தலைமையில் இடம்பெறவுள்ளது. (4-6)

# கறுவாச் செய்கை மேற்கொள்ள முல்லைத்தீவும் சிறந்த இடம்

## கறுவா ஆராய்ச்சி நிலையம் பரிந்துரை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்திலும் கறுவாச் செய்கையினை மேற்கொள்வதற்கு சிறந்த மண் மற்றும் காலநிலை காணப்படுவதாக கறுவா ஆராய்ச்சி நிலையத்தினால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

இலங்கையின் வடக்கிலும் கறுவாச் செய்கையினை மேற்கொள்ளலாம் என கறுவா ஆராச்சி நிலையம் பரிந்துரை செய்துள்ளது.

முல்லைத்தீவு விவசாயிகளிற்கு கறுவா பயிரிடுதல் தொடர்பான ஆலோசனையும் பயிற்சி வகுப்பும் அவுஸ்திரேலியாவின் கறுவா ஆராய்ச்சியாளர்களால் முன்னெடுக்கப்பட்டது.

அவை நிறைவடைந்த பின்னர் ஊடகங்களிற்கு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

தொடர்ந்தும் அவர்கள் தெரிவிக்கையில்,

முல்லைத்தீவு மாவட்டத்தில் சுதந்திரபுரத்தில் கறுவா பயிர்ச் செய்கையினை மேற்கொள்வதற்கு உகந்த மண் காணப்படுவதால் அதனை பயிரிட முடியும் என அவுஸ்திரேலியாவின் கறுவா ஆராய்ச்சி நிலையம் தெரிவித்துள்ளது.

அத்துடன், கறுவாவை நாற்று மேடை போடுவதற்கான செய்முறை விளக்கத்தினையும் அவற்றை நடுவது தொடர்பான விளக்கத்தினையும் செய்து காட்டினார்கள்.

அத்துடன் விதைகளையும் எமக்கு தந்துள்ளதுடன் அவற்றை பயிரிடுவதன் மூலம் வருமானத்தையும் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் தெரிவித்துள்ளனர்.

இது ஒரு நல்ல திட்டமாக காணப்படுவதால் அனைவரும் சிந்தித்து செயற்பட்டதால் முல்லைத்தீவில் இருந்தே கறுவாவினை ஏற்றுமதி செய்கின்ற வாய்ப்பு உருவாகும் எனவும் தெரிவித்தனர். (4)



ஈழமக்கள் புரட்சிகரவிடுதலை முன்னணியின் செயலாளர் பத்மநாபா மற்றும் போராளிகளின் 33 ஆவது தியாகிகள் தினம் வவுனியாவில் நேற்றுக் காலை அனுஷ்டிக்கப்பட்டது.இதன் போது மணிக்கூட்டுகோபுர சந்தியில் அமைந்துள்ள பத்மநாபாவின் சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டு, மலரஞ்சலி செலுத்தப்பட்டது. (படம்- சதீஸ்)

# யாழ்.மாநகர சபையின் நடமாடும் சேவை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபையின் வரியிறுப்பாளர்களின் நன்மை கருதி நாளை 21 ஆம் திகதி காலை 9 மணி முதல் மாலை 3 மணி வரை நடமாடும் சேவை நவீன சந்தைத் தொகுதிக்குச் செல்லும் ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள நுழைவாயிலில் நடைபெறவுள்ளது.

வட்டாரம் 14 மற்றும் 25 ஆம் வட்டாரங்களிற்கான ஆதனவரி அறிவித்தல் படிவம்/ சோலைவரி வழங்கல், பெயர் மாற்ற விண்ணப்பப்படிவம் வழங்கல். துவிச்சக்கரவண்டி உரிமம் வழங்கல் போன்ற சேவைகளை வழங்குவதுடன் பொதுமக்களால் இதுவரை காலமும் செலுத்தாதுள்ள ஆதனவரி நிலுவைகள் மற்றும் நடப்பாண்டு ஆதனவரி, போன்றவற்றைப் பெற்று யாழ். மாநகர சபையின் அபிவிருத்தி நடவடிக்கைகளை முழுமையாக செலுத்தும் பட்சத்தில் மூன்றாம், நான்காம் காலாண்டுக்கான ஆதனவரியின் 5 % கழிவினைப் பெற்றுக் கொள்ள முடியும். எனவே பொதுமக்கள் இதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு யாழ். மாநகரசபை ஆணையாளர் அறிவித்துள்ளார். (4)

# வீட்டிலிருந்த மூதாட்டியை தாக்கி பெருமளவு நகை,பணம் கொள்ளை

## இளவாலையில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

இளவாலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட, பண்டத்தரிப்பு - வடலியடைப்பு பகுதியில் உள்ள வீடு ஒன்றில் இருந்து நேற்று முன்தினம் 19 பவுண் நகை மற்றும் ஒரு தொகை பணம் என்பன கொள்ளையிடப்பட்டுள்ளன.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரிவிக்கையில்,

குறித்த வீட்டில் 63 வயதுடைய பெண்மணி ஒருவர் தனியாக வசித்து வந்துள்ளார். இந்நிலையில் நேற்றிரவு அவரின் வீட்டினை உடைத்து உள்ளே சென்ற கொள்ளையர்கள் அவரை மிக மோசமாக தாக்கி, வீட்டில் உள்ள நகைகளை தருமாறு துன்புறுத்தினர். அதன்பின்னர் வீடு முழுவதும் சல்லடை போட்டு தேடி 19 பவுண் நகைகள் மற்றும் ஒரு தொகை பணம் என்பவற்றை கொள்ளையடித்தனர்.

பின்னர் வயோதிப பெண்மணியின் காதில் இருந்த் தோட்டினையும் மிரட்டி பறித்துச் சென்றுள்ளனர்.

இதன்போது தாக்குதலுக்கு உள்ளான வயோதிப பெண் தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார். இச்சம்பவம் குறித்து இளவாவாலை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

குறித்த பகுதிக்கு விரைந்த தடயவியல் பொலிஸார் கொள்ளையர்களுடையது என சந்தேகிக்கப்படும் மாதிரிகளை பெற்று சென்றுள்ளனர். (4-6-104)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சீமெந்துக்கான...

வரி ஜூன் மாதம் முதல் அமுலுக்கு வரும் வகையில் 3 ரூபாயில் இருந்து 5 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளதாக முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு அறிவித்துள்ளது. (ம-7)

## தமிழர்களின்...

பிட்டுள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

"தொல்லியல் திணைக்களத்தின் ஆய்வாளர் கலாநிதி மேதானந்த எல்லாவல தேரர் இரு நாட்களுக்கு முன்னர் குருந்தூர் மலை காணி விகாரைக்கும் சிங்கள மக்களுக்குமுரியது என பல வரலாற்று ஆய்வுகள் அடிப்படையில் குறிப்பிட்டிருந்தார்.

அங்கே தமிழ் பௌத்தர்கள் வாழ்ந்தார்கள் என்று இந்த வரலாற்றை இவர் முதலான தேரர்கள் படிக்க வேண்டும். பூர்வீகமாக பஞ்ச ஈஸ்வரங்களை கொண்டு தமிழர்கள் வாழ்ந்தார்கள்.

பிரபாகரனின் கொள்கைகளை தமிழ்க் கட்சிகள் பின்பற்றுவதாக மேதானந்த எல்லாவல தேரர் குறிப்பிடுகின்றார்.

இவர் போன்றோர் சிங்கள மக்களை நரகத்திற்கு கொண்டு செல்லும் கரும வினைகளைச் செய்கின்றனர்.

இந்த நாட்டில் இரத்தக்களரி ஏற்படுவதற்கும் மதத்தலைவர்கள் தான் காரணம்" பௌத்த பிக்குமார் நாட்டின் சாபக்கேடு என சிறீதரன் எம்.பி குறிப்பிட்டார். (ம-7)

## நயினைத் தாயின்...

வரலாற்றுச் சிறப்புமிக்க் நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவம் நேற்று நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

தொடர்ந்து பதினைந்து தினங்களாக இவ்வாலய மஹோற்சவம் பக்திபூர்வமாக இடம்பெறவுள்ள நிலையில் ஆலயத்தின் புனிதத் தன்மையினைக் காத்து ஆலய வளாகத்தினுள் சமூக புரள்வான காரியங்களில் ஈடுபடுவதை முற்றாக தவிர்த்து தமிழ்ப் பண்பாடு, கலாசார முறைமைகளினை பின்பற்றுமாறு ஆலய அறங்காவல் சபையினர் கோரியுள்ளனர். (ம-7,33)

## ஐ.நாவில்...

இலங்கை அரசாங்கம் பொறுப்புக்கூறல் தொடர்பான தீர்மானங்களை நிராகரித்த போதிலும், இந்த விடயத்தில் மனித உரிமை பேரவை தொடர்ந்தும் தனது பணிகளை ஆற்றும்.

ஐ.நா மனித உரிமை ஆணையாளர் வோல்கர் டர்க் எதிர்வரும் 21 ஆம் திகதி பிற்பகலில் இலங்கை தொடர்பான ஒரு வாய்மொழி அறிக்கையிடலை செய்யவுள்ள நிலையில் அதற்கு முன்னோட்டமாக நேற்றைய கருத்து வந்துள்ளது.

நேற்றைய தனது ஆரம்ப உரையில் இலங்கை விடயத்தையும் தொட்ட ஆணையாளர், மனித உரிமை பேரவையில் நிறைவேற்றப்பட்ட இலங்கை தொடர்பான பொறுப்புக்கூறல் தீர்மானங்களை இலங்கை அரசாங்கம் நிராகரித்தமை கவலைக்குரியது என விமர்சித்திருந்தார்.

எனினும் இலங்கை அரசாங்கம் இவ்வாறாக இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்களுக்கான பொறுப்புக்கூறலை நிராகரித்திருந்தாலும் இந்த விடயத்தில் மனித உரிமை பேரவை தொடர்ந்தும் தனது பணிகளை ஆற்றும் எனவும் அவர் உறுதி கூறியிருந்தார்.

இவ்வாறான பொறுப்புக்கூறல் செயற்பாடுகளுக்காக கடந்த பத்து வருடங்களில் இலங்கைக்கு சென்ற மனித உரிமை பேரவையின் பல அதிகாரிகள் அங்கு மேற்கொள்ள வேண்டிய செயற்றிட்டங்களுக்கான பரிந்துரைகளை வழங்கியதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறாக முன்வைக்கப்பட்ட பரிந்துரைகளை இலங்கை அரசாங்கம் நடைமுறைப்படுத்த வேண்டுமெனக் கோரிய ஆணையாளர், இந்த விடயத்தில் இலங்கையை தான் முன்னகர்ந்து செல்வதற்குரிய ஊக்குவிப்பை வழங்குவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இந்த முறை இடம்பெறும் அமர்வில் இலங்கை மீதான அழுத்தம் ஒப்பீட்டளவில் குறைவு என்றாலும் ஏற்கெனவே ஜெனிவாவில் இருக்கும் இலங்கை குறித்த நிகழ்ச்சி நிரல்கள் இலங்கைக்கு சவாலானவை என்பதை ஆணையாளரின் நேற்றைய ஆரம்ப உரையும் தெளிவுபடுத்தியுள்ளதாகவே தெரிகிறது. (ம-7)

## லண்டனில்...

லண்டனில் ஜனாதிபதி ரணிலுக்கு எதிராக ஈழத் தமிழர்கள் கண்டனப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

பிரித்தானிய தலைநகர் லண்டனில் நேற்று பிற்பகல் இடம்பெற்ற சர்வ தேச ஜனநாயக ஒன்றியத்தின் நாற்பதாவது ஆண்டு நிறைவை மையப்படுத்திய மாநாட்டில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பங்கெடுக்கும் நிலையில் அவருக்கு எதிர்ப்புத் தெரிவித்து கண்டனப் போராட்டம் ஒன்று நடத்தப்பட்டுள்ளது.

தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்தப் போராட்டம் குறித்த நிகழ்வு இடம்பெறும் இடத்துக்கு அருகில் நேற்று மாலை இடம்பெற்றது.

இந்தப் போராட்டத்தின், போது "எமது தேசம் தமிழீழம் ரணிலே வெளியேறு" எனும் கோசங்களை எழுப்பி தமது எதிர்பை வெளிப்படுத்தியிருந்தனர். (ம-7)

## நண்பர்கள்...

துவதை வாடிக்கையாகாகக் கொண்டுள்ள குறித்த இளம் குடும்பஸ்தர், நேற்று முன்தினம் வீட்டில் நண்பர்களுடன் சேர்ந்து மது அருந்த இருந்தபோது நண்பர்கள் முன்னிலையில் குறித்த இளைஞரை அவரது மனைவி திட்டி விரட்டியுள்ளார்.

இதனால் மனமுடைந்த அவர் வீட்டில் தூக்குப் போட்டு தற்கொலை செய்து கொண்டதாக பொலிஸார் தெரிவித்தனர். (ம-7)

## மல்லா...

என அடையாளம் காணப்பட்டார்.

குறித்த நபர், துணுக்காய் விநாயகபுரம் பகுதியில் வசித்து வந்த நண்பர் ஒருவரின் வீட்டில் தங்கியிருந்தபோது காணாமல் போயிருந்தார் எனவும், இவர் ஏற்கெனவே கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் நோய் ஒன்றுக்கு சிகிச்சை பெற்று வந்தார் எனவும் பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்தது.

இதையடுத்து குறித்த சடலம், பிரேத பரிசோதனைக்காக முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனைக்குக் கொண்டு வரப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனை சட்ட வைத்திய அதிகாரியால் மேற்கொள்ளப்பட்ட பிரேத பரிசோதனையின்போது இறந்தவரின் தலையில் அடிகாயங்கள் காணப்படுகின்றமை தெரியவந்துள்ளது.

சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்ட நிலையில் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)


பெண் விற்பனையாளர் தேவை
எமது ஜவுலி கடைக்கு புடைவை அனுபவம் உள்ள பெண் விற்பனையாளர் தேவை.
சென்னை பெசன் வேல்ட்
63, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.
(16026)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
076 097 3127

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 19/06/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1605
வெற்றி இலக்கங்கள்
விருச்சிகம் 7 0 2 0 6 4

தன நிதானய
திகதி - 2023.06.19
சீட்டிழுப்பு இலக்கம் - 1180
I 38 46 49 51
ஆங்கில எழுத்து / வெற்றி இலக்கங்கள்

கொவிசெத
திகதி 2023.06.19
சீட்டிழுப்பு இலக்கம் 3392
ஆங்கில எழுத்து / வெற்றி இலக்கங்கள்
V 23 42 45 60
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 19/06/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1498
வெற்றி எழுத்து / சுப்பர் இலக்க / வெற்றி இலக்கங்கள்
H 04 01 43 73 78

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.06.19
சீட்டிழுப்பு இலக்கம் 459
மேஷம் 02 07 10 16 மேஷம்
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2023/06/19
சீட்டிழுப்பு இலக்கம் 5150
U 4 4 1 9 4 0
தேசிய லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2124
நிறம் ஊதா
சீட்டிழுப்பு திகதி 2023.06.19
தினம் திங்கட்கிழமை
A 14 28 49 50
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,627,780/-
DLB

சனிதா
திங்கட்கிழமை
சீட்டிழுப்பு திகதி 2023.06.19
வெற்றி வாரம் 4285
வர்ணம் இளம் நீலம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 51,103,110.00
வெற்றி இலக்கங்கள்
28 39 60 71 Q
DLB

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 3,948,723/-
திகதி 2023-06-19
வெற்றி வாரம் 3836
வர்ணம் மஞ்சள்
வெற்றி இலக்கங்கள் 35 52 58 61
மேஷம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 10,319,400/-
DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
G 28 09 11 53 70
சுப்பர் இலக்கம்
1300
பசுமை
2023.06.19
திங்கள்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 339,112,102.60
DLB DEVELOPMENT LOTTERIES

ஜயோதா Jayoda
திங்கட்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2023.06.19
வெற்றி வாரம் : 1931
வர்ணம் : செம்மஞ்சள்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 44,104,458.00
வெற்றி இலக்கங்கள்
03 21 52 63 X
DLB

அட கோடிபதி ADA KOTIPATHI
திங்கட்கிழமை
வெற்றி வாரம் : 1950
வர்ணம் : சிவப்பு
சீட்டிழுப்பு திகதி : 2023.06.19
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 52,782,517/-
வெற்றி இலக்கங்கள்
37 59 71 77 T
DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடு விற்பனைக்கு

கொக்குவில் மேற்கு
பொன்னையா வீதியில் 1 1/4
பரப்பில் 3 அறையுடன் கூடிய
வடக்கு வாசல் வீடு
விற்பனைக்கு உண்டு.
தரகர் தேவையில்லை (16014)

**076 105 6343**

## பணிப்பெண் தேவை

யாழ் நகரில் உள்ள சிறிய
குடும்பம் ஒன்றுக்கு வீட்டில்
தங்கி இருந்து பணி புரிவதற்கு
பணிப்பெண் தேவை. (16025)

**077 327 6502**

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் கல்வியங்காட்டில் 4 பரப்பு காணி விற்பனைக்கு**

- கல்வியங்காட்டு சந்தியில் இருந்து 1 ½ km தூரத்தில் பருத்தித்துறை வீதியில் இருந்து 1200m தூரம் (இலங்கை நாயகி அம்மன் கோயில் முன் வீதி
- கல்வியங்காடு புதிய செம்மணி வீதியில் மடத்தடியில்
- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்
- ஒரு பரப்பின் விலை 1 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் மட்டும்.
- குடியிருப்புகள் சூழ உள்ள காணி

(16020)

**076 739 0413**

# முதல் தமிழ் பெண் ஜனாதிபதி சட்டத்தரணி சாந்தா காலமானார்



இலங்கையின் முதல் தமிழ் பெண் ஜனாதிபதி சட்டத்தரணி சாந்தா அபிமன்னசிங்கம் (வயது 78) நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு காலமானார்.

யாழ்ப்பாணம் சட்டத்தரணிகள் சங்கத்தின் நீண்டகால தலைவியாக செயற்பட்ட அவர், யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நீதிமன்றங்களின் மேம்படுத்தல்களிலும் சட்டத்தரணிகளின் நலன்களிலும் அக்கறையுடன் செயற்பட்டிருந்தார். (ம-7.33)

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (16027)

**076 825 7716** (ஆகாஸ்)

## மேட்டுக்காணி விற்பனைக்குண்டு

கிளாலிச் சந்தியிலிருந்து புலோப்பளைப் பக்கமாக ஒரு கிலோ மீற்றர் தூரத்தில் ஆறு ஏக்கர் தென்னம் பிள்ளை வைப்பதற்கு சாதகமான மேட்டுக்காணி நான்கு பக்கமும் தூண்கள் போடப்பட்டு ஏழு வரி முட்கம்பிகளால் அடைக்கப்பட்டு கேற்றும் போடப்பட்டுள்ளது. இக்காணி விற்பனைக்குண்டு.

(16015)

**077 649 1027**

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் புத்தூரில் 24 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.**

- பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியில் இருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன்
- புத்தூர் தண்ணீர் தாங்கி அருகாமை(நிலப்பரப்பு)
- மூன்று பரப்பாகவும் இரண்டரைப் பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- வியாபார நிலையங்கள், திருமண மண்டபங்கள், வீடு அமைப்பதற்கு உகந்த இடம்
- ஒரு பரப்பின் விலை இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய் மட்டும்.
- பார்வையிடும் நேரம் காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை
- நன்னீர் ஊற்று.

(16020)

**076 733 6047**
**076 755 8606**

1 ஆம் ஆண்டு

# நினைவலைகள்...



தோற்றம்
15 - 03 - 1969

மறைவு
20 - 06 - 2022

## அமரர். திருமதி ஜெகதீஸ்வரி லோகேந்திரன் (ஜிக்கி)

(கெருடாவில் றோட், ஊரிக்காடு, வல்வெட்டித்துறை.)

திதி : 08.07.2023

முதலாம் ஆண்டு நிகழ்வுகள் பிரான்சில் உள்ள அன்னாரின் இல்லத்தில் இடம்பெறும்.

ஓராண்டு கடந்தாலும் உங்கள் நினைவுகள்
எம்மை விட்டு அகலாது
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்,
சகோதரி
திருமதி சுபத்திராதேவி சிவகணேசன்
குடும்பத்தினர்

தும்பளை,
பருத்தித்துறை.
(C-6776)

## மரண அறிவித்தல்



தோற்றம்
07 - 03 - 1938

மறைவு
17 - 06 - 2023

## தர்மராசா சரஸ்வதி

யாழ்ப்பாணம் நாவாந்துறையைப் பிறப்பிடமாகவும் வராகி அம்மன் கோவிலடி கொக்குவில் மேற்கு, கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட தர்மராசா சரஸ்வதி அவர்கள் கடந்த (17.06.2023) சனிக்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சுப்பர் - தங்கமுத்து தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற தர்மராசாவின் அன்பு மனைவியும், புவனேஸ்வரி, ஜெகதீஸ்வரி(வேவி - ஜேர்மனி), ஜெயசேகர்(பிரான்ஸ்), ஜெயவதனி(சுகந்தி), விஜயசேகர் (பிரான்ஸ்), தர்மசேகர்(பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், எட்வேட் (ஜேர்மனி), ஜெயராணி(பிரான்ஸ்), அனுசியா(பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் றஜீவன், நிறோஜினி, கஜீதரன், லின்டா றவிதாஸ், ஜெயதீபா, ஜெயதீசன், விஸ்னு, சதுஸ் ரீபன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், றித்தேஸ், அஜீஸ், அனீஸ், எமி ஆதிரா, டியா அக்ஷரா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.06.2023) செவ்வாய்க் கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வராகி அம்மன் கோவில்,
கொக்குவில் மேற்கு.
(16024)

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.06.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.